




Metro லீடர்

# மெட்ரோ LEADER

தமிழ் பேசும் மக்கள் 'நமக்கான நாளிதழ்'







லீடர்: 04 இதழ்: 285 17.11.2024 பக்கங்கள்:05 editorml21@gmail.com விலை:75/-

# இம்முறை பாராளுமன்றத்திற்கு அதிகளவான பெண்கள் தெரிவு



(ஸைபுல் ஹபீஸ்)

நடைபெற்று முடிந்த 10 ஆவது பாராளுமன்ற தேர்தலில் அதிகளவான பெண்கள் பாராளுமன்ற உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள். அவர்களில் பெரும்பாலான வர்கள் தேசிய மக்கள் சக்தியிலிருந்து தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசில் 1989 ஆம் ஆண்டு தொடக்கம் 2020 ஆம் ஆண்டு வரை பெண்களின் பிரதிநிதித்துவம் 6 சதவீதத்தை விஞ்ஞாமலே இருந்து வந்தது. இலங்கை வரலாற்றில் அதிகளவான பெண்

02




## வாக்களிக்கும் வாய்ப்பை இழந்த ஒரு இலட்சம் வாக்காளர்கள்

நடைபெற்று முடிந்த பாராளுமன்ற தேர்தலில் சுமார் ஒரு இலட்சம் தனியார் துறை ஊழியர்கள் விடுமுறை இல்லாததால் வாக்களிக்க முடியாமல் போயுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பாராளுமன்றத் தேர்தலில் வாக்களிக்க கிட்டத்தட்ட ஒரு இலட்சம் தனியார் துறை ஊழியர்கள் விடுமுறை எடுக்க முடியாமல் தவித்துள்ளதாக தேர்தல் கண்காணிப்பாளர்கள் மதிப்பிடுகின்றனர்.

02

## IMF இன் மூன்றாவது குழு இலங்கை விஜயம்

இலங்கைக்கான சிரேஷ்ட தூதுவர் பீட்டர் ப்ரூயர் தலைமையிலான சர்வதேச நாணய நிதியத்தின் (IMF) குழுவொன்று நவம்பர் 17 முதல் 23 வரை கொழும்பிற்கு விஜயம் செய்யவுள்ளது. IMF இன் விரிவாக்கப்பட்ட நிதி வசதியின் கீழான இலங்கையின் பொருளாதார சீர்திருத்தத் திட்டத்தின்

02

## 66 கடவுச்சீட்டுகளுடன் சிக்கிய பெண்

கஹதுடுவ, சியம்பலாகொட பிரதேசத்தில் நேற்று (16) மாலை 66 கடவுச்சீட்டுகளை வைத்திருந்த பெண் உட்பட இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட பெண் 42 வயதுடையவர் எனவும், சந்தேகநபர் 38 வயதுடையவர் எனவும், அவர்கள் சியம்பலாகொட பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

சந்தேகநபரான பெண் சிங்கப்பூர், ஹொங்கொங், டுபாய் மற்றும் ருமேனியா ஆகிய நாடுகளில்

02

## NPP தேசிய பட்டியல் உறுப்பினர்கள் பெயர்கள் வெளியீடு

தேசிய மக்கள் சக்தியின் தேசிய பட்டியல் ஊடாக பாராளுமன்றம் செல்லும் உறுப்பினர்களின் பெயர் பட்டியலை தேர்தல் ஆணைக்குழு வெளியிட்டுள்ளது. இதன்படி, தேசிய மக்கள் சக்தியினால் தேசியப் பட்டியல் ஆசனங்களுக்கு பரிந்துரைக்கப்பட்ட 18 நபர்களின் பெயர்கள்

02

## பிரத்தியேக வகுப்புகளுக்கும் தடை

எதிர்வரும் செவ்வாய்க் கிழமை (19) நள்ளிரவு முதல் க.பொ.த உயர்தரப் பரீட்சை தொடர்பான அனைத்து பிரத்தியேக வகுப்புகளுக்கும் தடை விதிக்கப்பட்டுள்ளதாக பரீட்சை திணைக்களம் தெரிவித்துள்ளது.

## இம்முறை பாராளுமன்றத்திற்கு.....

பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்ட ஆண்டுகளாக1989, 2004, 2010 ஆம் ஆண்டுகளை குறிப்பிடலாம்.

இதேவேளை இம்முறை இடம்பெற்ற பொதுத் தேர்தலில் 21 பெண் பிரதிநிதிகள் பாராளுமன்றத்துக்கு தெளிவாகியுள்ளனர்.

இதற்கமைய தேசிய மக்கள் சக்தி சார்பில் கொழும்பு மாவட்டத்திலி -ருந்து போட்டியிட்ட ஹருணி அமரசூரிய, கௌசல்யா ஆரியரத்ன, சமன்மலி குணசேகர ஆகியோரும், கம்பஹா மாவட்டத்திலிருந்து போட்டியிட்ட ஹேமாலி குணசேகர களுத்துறை மாவட்டத்தில் போட்டியிட்ட நிலந்தி ஹொட்டகச்சி, ஓசனி உமங்கா ஆகியோரும், கண்டி மாவட்டத்தில் போட்டியிட்ட துசாரி ஜெயசிங்க, மாத்தளை மாவட்டத்தில் போட்டியிட்ட கீர்த்தி வாசலகே, நுவரெலியா மாவட்டத்தில் போட்டியிட்ட அனுஷ்கா தர்ஷினி தினகரத்ன, கிருஷ்ணன் கலைச் செல்வி ஆகியோரும், காலி மாவட்டத்தில் போட்டியிட்ட சுசாரா லியனகே, மாத்தறை மாவட்டத்தில் போட்டியிட்ட சரோஜா சாவித்திரி போல்ராஜ், இரத்தினபுரி மாவட்டத்தில் போட்டியிட்ட நிலுசா லக்மாலி, கேகாலை மாவட்டத்தில் போட்டியிட்ட சாகிரிக்கா கணகாணி, திகாமடுல்ல மாவட்டத்தில் போட்டியிட்ட முது ரத்வத்தே, குருணாகல் மாவட்டத்தில் போட்டியிட்ட கீதா ஹேரத், புத்தளம் மாவட்டத்தில் போட்டியிட்ட ஹிருனி மதுஷா விஜயசிங்க, மொனராகலை மாவட்டத்தில் போட்டியிட்ட சதுரி கங்காணி, பதுளை மாவட்டத்தில் போட்டியிட்ட அம்பிகா சாமுவேல் ஆகியோர்களும் பாராளுமன்றம் தெரிவாகியுள்ளனர்.

இதேவேளை ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் கண்டி மாவட்டத்தில் போட்டியிட்ட சந்ராணி கிரியல்ல, மாத்தளை மாவட்டத்தில் போட்டியிட்ட ரோகினி குமாரி கவிரட்ன ஆகியோர்களும் பாராளுமன்றத்திற்கு தெரிவாகியுள்ளனர்.

## NPP தேசிய பட்டியல்.....

01. பிமல் நிரோஷன் ரத்னாயக்க
02. டொக்டர். அனுர கருணாதிலக்க
03. உபாலி பன்னிலகே
04. எரங்க உதேஷ் வீரரத்ன
05. அருண ஜயசேகர
06. டொக்டர்.ஹர்ஷன சூரியப்பெரும
07. ஜனித ருவான் கொடித்துவக்கு
08. புன்யா ஸ்ரீ குமார ஜயகொடி
09. ராமலிங்கம் சந்திரசேகர்
10. டொக்டர்.நஜித் இந்திக்க
11. சுகத் திலகரட்ன
12. லக்மாலி காஞ்சன ஹேமசந்ர
13. சுனில் குமார கமகே
14. காமினி ரத்னாயக்க
15. பேராசிரியர். ருவன் சமிந்த ரனசிங்க
16. சுகத் வசந்த டி சில்வா
17. அபுபக்கர் அதம்பாவா
18. ரத்னாயக்க ஹெட்டிகே உபாலி சமரசிங்க

## IMF இன் மூன்றாவது.....

திட்டத்தின் மூன்றாவது மதிப்பாய்வை இக்குழு நடாத்தவுள்ளதாக, IMF பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

இலங்கையின் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்துவதையும் நாடு எதிர்நோக்கும் நிதி சவால்களை எதிர்கொள்வதையும் இலக்காகக் கொண்ட சீர்திருத்தங்களின் முன்னேற்றத்தை மதிப்பிடுவதில் இந்த மீளாய்வு ஒரு முக்கியமான படியாகும்.

சர்வதேச நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதித் திட்டம் இலங்கையின் பொருளாதார மீட்பு முயற்சிகளை எளிதாக்குவதற்கு தேவையான நிதி உதவி மற்றும் கொள்கை வழிகாட்டல்களை வழங்குகிறது

## 66 கடவுச்சீட்டுகளுடன்.....

ஆகிய நாடுகளில் பணியாற்றிய பின்னர், கடந்த 2022ஆம் ஆண்டு இந்த நாட்டுக்கு வருகைத்தந்து சந்தேக நபருடன் இந்தப் பகுதியில் வசித்து வந்ததாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவர்கள் சுமார் இரண்டரை வருடங்களாக பல்வேறு நபர்களுக்கு வெளிநாட்டு வேலைவாய்ப்பை பெற்றுத்தருவதாக கூறி, அந்த நபர்களின் கடவுச்சீட்டை பெற்றுக்கொண்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

பின்னர், முகவர் நிறுவனங்கள் ஊடாக விசாவுக்கு விண்ணப்பித்து, வேலைக்கான நேர்முகத்தேர்வுக்கு அழைப்பதாக கூறி, குறித்த நபர்களிடம் இருந்து 02 முதல் 03 இலட்சம் ரூபாய் வரை பணம் பெற்று, அந்த கடவுச்சீட்டுக்களை தம்மிடம் வைத்திருந்தனர்.

சந்தேகநபர்கள் தங்கியிருந்த வீட்டை சோதனையிட்ட போது, 20 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கஹதுடுவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## வாக்களிக்கும் வாய்ப்பை.....

இந்த விடயம் தொடர்பில் 12 நிறுவனங்களின் ஊழியர்களிடமிருந்து முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ள தாக ஜனநாயக மறுசீரமைப்பு மற்றும் தேர்தல் கற்கைகள் நிறுவகத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் மஞ்சுள கஜநாயக்க தெரிவித்தார்.

# ஜனாதிபதியின் கொள்கை அறிக்கை சமர்ப்பிக்கும் நேரத்தில் திருத்தம்



நவம்பர் 21 ஆம் திகதி 10வது பாராளுமன்றத்தின் ஆரம்ப அமர்வில் முற்பகல் 11.30 மணிக்கு ஜனாதிபதி அனுர குமார திஸாநாயக்க அரசாங்க கொள்கை அறிக்கையை சமர்ப்பிப்பார் என பாராளுமன்றத்தின் தொடர்பாடல் பிரிவு தெரிவித்துள்ளது.

10ஆவது பாராளுமன்றத்தின் ஆரம்ப அமர்வு நவம்பர் 21ஆம் திகதி காலை 10:00 மணிக்கு ஆரம்பமாகவுள்ளதுடன், அன்றைய தினம் முற்பகல் 11:30 மணியளவில் ஜனாதிபதி அரசாங்கத்தின் கொள்கை அறிக்கையை சமர்ப்பிப்பார்.

நவம்பர் 21 ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிக்கு ஜனாதிபதி அரசாங்கத்தின் கொள்கை அறிக்கையை சமர்ப்பிப்பார் என பாராளுமன்றம் முன்னதாக அறிவித்தது.

அரசியலமைப்பின் உறுப்புரை 33(அ) பிரிவின்படி, பாராளுமன்றக் கூட்டத் தொடரின் தொடக்கத்தில் அரசாங்கக் கொள்கை அறிக்கையை சமர்ப்பிக்க ஜனாதிபதிக்கு அதிகாரம் உள்ளது. மேலும், அரசியலமைப்பின் உறுப்புரை 33 (ஆ) படி, ஜனாதிபதி பாராளுமன்றத்தின் சம்பிரதாய அமர்வுகளுக்கு தலைமை தாங்குவதற்கு உரிமையுடையவராவார்.

இந்த அமர்வின் போது, அரசாங்கத்தின் தொலைநோக்குப் பார்வை மற்றும் வரவிருக்கும் முன்முயற்சிகள் பற்றிய விரிவான விளக்கத்தை, கொள்கை அறிக்கையின் மூலம் ஜனாதிபதி பாராளுமன்றத்திலும் பொதுமக்களுக்கும் வழங்குவார்.

# மக்களின் அபிலாஷைகளைக் கட்டியெழுப்பும் இயலுமை அவர்களுக்கு உதயமாகட்டும்

## ஐக்கிய மக்கள் சக்தி தெரிவிப்பு

வளமான நாட்டிற்காக அர்ப்பணிப்போடு செயற்படுவோம் என ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார்.

குறித்த அறிக்கையில் அவர் வெளியிட்டுள்ளதாவது,

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் 10 ஆவது பாராளுமன்றத்திற்கான மக்கள் பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதற்காக நடைபெற்ற பொதுத் தேர்தலில், ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க அவர்கள் தலைமையிலான தேசிய மக்கள் சக்தி பெரும்பான்மை ஆசனங்களைப் பெற்று மாபெரும் வெற்றியீட்டியதற்கு எமது மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

இதன் பிரகாரம், இலங்கை மக்கள் எதிர்பார்க்கும் நல்லாட்சிக்குத் தேவையான பலமும், மக்களின் கனவுகள் நனவாகும் தேசத்தை உருவாக்குவதற்குத் தேவையான ஆற்றலும் தற்போதைய ஆட்சிக்கு குறைவில்லாமல் கிட்டியுள்ளது. இதன் ஊடாக ஒரு நாடாக நாம் தற்போது எதிர்நோக்கி வரும் சிரமங்களை போக்கக்கூடிய வல்லமை தற்போதைய ஆட்சிக்கு கிட்டியுள்ளது.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் கீழ், இந்நாட்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளின் அடிப்படையில், தமது ஆட்சிக்காலத்தில் தமது கொள்கைகளையும் திட்டங்களையும் வெற்றிகரமாக நிறைவேற்றுவதே தமது சவாலாக இருப்பதை அவர்கள் உணர்ந்துள்ளனர் என நாங்கள் நம்புகின்றோம்.

அவர்களின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு இந்நாட்டின் 220 இலட்சம் மக்களின் அபிலாஷைகளைக் கட்டியெழுப்பும் இயலுமை அவர்களுக்கு உதயமாகட்டும் என ஐக்கிய மக்கள் சக்தியினராக நாம் பிரார்த்திக்கிறோம்.

Metro லீடர் மெட்ரோ LEADER
தமிழ் பேசும் மக்கள் 'நமக்கான நாளிதழ்'

Metro Media Network
502, Main Street, Sainthamaruthu- 14.
Sri Lanka.
Ads: 0779007738
News: 0772539298
Circulation: 0766735454

# DECC மெட்ரோ நிலையம் மற்றும் தோஹா சிட்டி சென்டர் மாலுக்கும் இடையே பாதசாரி பாலம் திறந்து வைப்பு

தோஹாவில் அமைந்துள்ள மெட்ரோவின் ரெட் லைனிலுள்ள DECC நிலையத்திற்கும் சிட்டி சென்டர் மாலுக்கும் இடையே பாதசாரிகள் கடப்பதற்காக புதிய பாலமொன்று அமைக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இரண்டு நிலையங்களுக்கு இடையில் அமைக்கப்பட்டுள்ள இப்பாலமானது பாதசாரிகள் நடந்து செல்வதற்கு மிகவும் எளிதான முறையில் அமைக்கப்பட்டுள்ளது.

இப்பாலமானது மிகவும் பாதுகாப்பானதாகவும் வாரத்தில் முழு நாளும் திறந்து இருக்கும் எனவும், வாடிக்கையாளர்களுக்கு தடையற்ற நுகர்வு அனுபவத்தை கொடுக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



## இலங்கையர் என்ற ஒற்றை வார்த்தையை கற்று தந்த பாராளுமன்ற தேர்தல்

இலங்கையில் நடைபெற்று முடிந்த 10 ஆவது பாராளுமன்ற தேர்தல் பல்வேறு பாடங்களையும், படிப்பினைகளையும் கற்றுக் கொடுத்துள்ளது என்றால் மிகையாகாது.

கடந்த காலங்களில் இனவாதம், பிரதேச வாதம் உள்ளிட்ட பல்வேறு வகையான கோரிக்கைகளை முன்வைத்து தேர்தல் முடிவுகள் எட்டப்பட்ட வரலாறுகளை அவதானிக்க கூடியதாக இருந்தது. எனினும் இம்முறை தேர்தலில் இலங்கையர் என்ற ஒற்றை வார்த்தைக்குள் தேர்தல் முடிவுகள் அடங்கியிருந்ததை காணக்கூடியதாகவுள்ளது என்ற உண்மையை யாராலும் மறுக்க முடியாது.

1978ஆம் ஆண்டு முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனவினால் கொண்டு வரப்பட்ட அரசியல் யாப்பில் பாராளுமன்றத்தில் 2:3 பெரும்பான்மை என்கின்ற விடயம் குறித்த காலத்தில் மாத்திரமே பெறப்பட்டிருந்தது. அதன் பின்னர் நடைபெற்ற எந்தவொரு தேர்தலிலும் பாராளுமன்றத்தில் அப்பெரும்பான்மை எந்தவொரு அரசாங்கத்தினாலும் பெற்றுக் கொள்வது எட்டாக்கனியாகவே காணப்பட்டது. இருந்த போதிலும் ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கம் மிகவும் இலகுவாக குறித்த இலக்கை தொட்டு விட்டது அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளது.

மக்கள் மனங்களில் மாற்றம் என்ற ஒரு எண்ணமே இருந்ததே தவிர இன, மத பேதங்களுக்கு முற்றுப் புள்ளி வைக்கப்பட்டுள்ளது.

இத்தேர்தலில் பரம்பரை மற்றும் பாரம்பரிய அரசியலுக்கு முற்றுப் புள்ளி வைக்கப்பட்டு சிறந்த நாட்டை கட்டியெடுப்ப வேண்டும் என்ற ஒரே நோக்கத்தை அடிப்படையாக கொண்டு மக்கள் வாக்களித்துள்ளார்கள் என்பது புலனாகின்றது.

இதைவிட கடந்த காலங்களை விடவும் பாராளுமன்றத்தில் பெண்களின் பிரதிநிதித்துவம் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இவைகளை அவதானிக்கும் போது ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்தில் சிறந்தொரு அரசியல் கலாசாரம் உருவாக்கப்பட்டுள்ளது என்பதை எவரும் மறுக்க முடியாது

editorml21@gmail.com

## இஸ்ரேல் பிரதமர் வீட்டில் மீண்டும் குண்டுத் தாக்குதல்



இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவின் வீட்டின் மீது மீண்டும் வெடிகுண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

வடக்கு இஸ்ரேலில் உள்ள செசரியா நகரில் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவின் வீட்டை நோக்கி, நேற்று (16) வெடிகுண்டு தாக்குதல் நடத்தப்பட்டதாக, இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சர் காட்ஸ் தெரிவித்தார். பிரதமர் வீட்டின் மீதான தாக்குதலில், 2 வெடிகுண்டுகள் அவரது தோட்டத்தில் விழுந்த சிசிடிவி காட்சியையும் காட்ஸ் பகிர்ந்துள்ளார்.

இருப்பினும், இந்த தாக்குதலின போது, சம்பவ இடத்தில் பிரதமரோ அவரது குடும்பத்தினரோ யாரும் இல்லாத காரணத்தால், உயிரிழப்புகள் ஏற்படவில்லையென மேலும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த சம்பவத்தையடுத்து, இஸ்ரேல் ஜனாதிபதி ஐசக் ஹெர்சாக் கண்டனம் தெரிவித்துள்ளார். இதில் ஈடுபட்டவர்கள் குறித்து விரிவான, விரைவான விசாரணை மேற்கொள்ளப்படும் என்று கூறியுள்ளார். இதுவரையில், இந்த தாக்குதலுக்கு எந்த அமைப்பினரும் பொறுப்பு கூறவில்லை. சுமார் ஒரு மாதத்திற்கு முன்னதாகவும், பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவின் அலுவலகம் மீது ட்ரோன் தாக்குதல் நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

ஜப்பான் அரச குடும்பத்தின் மூத்த உறுப்பினரான இளவரசி யூரிகோ தனது 101-ஆவது வயதில் காலமானார். பேரரசர் ஹிரோஹிட்டோவின் இளைய சகோதரரான இளவரசர் மிகாசாவின் மனைவியும், தற்போதைய பேரரசர் நருஹிட்டோவின் அத்தையுமான இளவரசி யூரிகோ காலமாகி விட்டதாக ஜப்பானிய அரசு அறிவித்துள்ளது.



## டிரம்புடன் ஒத்துழைக்கத் தயார் - சீன ஜனாதிபதி



எதிர்வரும் ஜனவரி மாதம் ஓய்வுபெறவுள்ள அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனுக்கும் சீன ஜனாதிபதி ஜின்பிங்கிற்கும் இடையிலான சந்திப்பு நேற்று (16) இடம்பெற்றுள்ளது.

பெருவில் நடைபெற்ற ஆசிய-பசிபிக் பொருளாதார ஒத்துழைப்பு உச்சி மாநாட்டின் போது இந்த சந்திப்பு நடந்தது.

இதன்போது அமெரிக்க ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள டொனால்ட் டிரம்புடன் ஒத்துழைக்கத் தயாராக இருப்பதாக சீன ஜனாதிபதி தெரிவித்திருந்தார்.

இருப்பினும், டிரம்பின் முதல் பதவிக் காலத்தில், சீன-அமெரிக்க உறவுகள் கடுமையாக பாதிக்கப்பட்டன, மேலும் கோவிட் ஒரு சீன வைரஸ் என்று டிரம்ப் கூறிய பிறகு, அந்த உறவுகள் வீழ்ச்சியடையும் நிலையை எட்டியமை குறிப்பிடத்தக்கது



## தேசிய உளவுத்துறை இயக்குனராக துளசி நியமனம்

அமெரிக்காவின் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ள டொனால்ட் ட்ரம்ப் துளசி கபார்ட்டை தேசிய உளவுத்துறை இயக்குனராக நியமித்துள்ளார்.

முன்னாள் ஜனநாயகக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த 43 வயதான துளசி கப்பார்ட், 2022ஆம் ஆண்டில் ஜனநாயகக் கட்சியிலிருந்து விலகினார். இவர் 20 ஆண்டுகளாக தேசிய பாதுகாப்பு துறையில் பணியாற்றியுள்ளார். மேலும், ஹவாய் மாகாணத்தில் இருந்து 4 முறை எம்.பி.யாக தெரிவு செய்யப்பட்ட துளசி அமெரிக்காவின் முதல் இந்து எம்.பி இவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# EAST லீடர்

## கட்சிக்கு வாக்களித்த அனைத்து வாக்காளர்களுக்கும் உளமார்ந்த நன்றிகள்

### புதிய எம்.பியாக தெரிவு செய்யப்பட்ட அஷ்ரப் தாஹிர்



(பாறுக் ஷிஹான்)

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சி திகாமடுல்ல தேர்தல் மாவட்டத்தில் ஒரு ஆசனத்தை பெற்றுக்கொள்வ தற்காக உழைத்த பத்து வேட்பாளர்களுக்கும் கட்சியின் உயர்பீட உறுப்பினர்கள் போராளிகள் ஆதரவாளர்கள் அனைவருக்கும் கட்சியின் பிரதி தேசிய அமைப்பாளர் என்ற ரீதியில் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன் என நிந்தவூர் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளரும் பாராளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டவருமான அஷ்ரப் தாஹிர் தெரிவித்தார்.

2024 நடைபெற்று முடிந்த 10 ஆவது பாராளுமன்ற தேர்தலில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சி சார்பாக போட்டியிட்டு வெற்றி பெற்ற பின்னர் வெள்ளிக் கிழமை பொதுமக்களினால் ஒழுங்கு செய்யப்பட்ட வரவேற்பு நிகழ்வில் உரையாற்றும் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்

## மக்களின் காவலனாக இருப்பேன்

### கவிந்திரன் கோடீஸ்வரன் பா.உ

(பாறுக் ஷிஹான்)



அம்பாறை மாவட்ட திகாமடுல்ல வாக்காளப் பெருமக்கள் 2024 ம் ஆண்டு பாராளுமன்ற தேர்தலில் பல சவால்களுக்கு மத்தியில் இலங்கை தமிழரசு கட்சி சார்பாக பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தை பெற பாடுபட்ட அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகள் தெரிவிப்பதுடன் வலுவிழந்து இருக்கின்ற மக்களின் காவலனாக இருப்பேன் என தமிழரசு கட்சியின் வெற்றி வேட்பாளர் கவிந்திரன் கோடீஸ்வரன் தெரிவித்தார்.

மக்கள் பிரதிநிதியாக தெரிவாகிய பின் காரைதீவு ஸ்ரீ கண்ணகி அம்மன் ஆலயத்தில் வெள்ளிக்கிழமை வழிபாடுகளில் ஈடுபட்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போது மேற்கண்டவாறு கூறினார். மேலும் தனது கருத்தில் அம்பாறை மாவட்ட தமிழ் பாராளுமன்ற பிரதிநிதியாக இலங்கை தமிழசு கட்சி சார்பில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரான என்னை தெரிவு செய்த மக்களுக்கு நன்றிகள். பாராளுமன்ற தேர்தலில் பல சவால்களுக்கு மத்தியில் இலங்கை தமிழரசு கட்சி சார்பாக பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தை பெறுவதற்கு பெரும் பாடுபட்டுள்ளதை நான் அறிவேன். இந்தத் தேர்தல் பிரசாரத்துக்கு மக்கள் வழங்கிய பேராதரவுக்கு மிக்க நன்றிகள்.

எனவே வலுவிழந்து இருக்கின்ற மக்களின் காவலனாக தொடர்ந்தும் இருப்பேன் என குறிப்பிட்டார்.

## திருகோணமலையில் 4 பாராளுமன்ற உறுப்பினர்கள்

(எம்.ஏ.முகமட்)

பாராளுமன்ற பொதுத் தேர்தலில் திருகோணமலை மாவட்டத்தில் தேசிய மக்கள் சக்தி 87,031 வாக்குகளைப் பெற்று இரு ஆசனங்களை-யும், ஐக்கிய மக்கள் சக்தி 53,058 வாக்குகளைப் பெற்று ஒரு ஆசனத்தையும், இலங்கை தமிழரசுக் கட்சி 34,168 வாக்குகளைப் பெற்று ஒரு ஆசனத்தையும் பெற்றுள்ளதாக திருகோண-மலை மாவட்ட அரசாங்க அதிபரும் தெரிவத்தாட்சி அலுவலருமான சாமிந்த ஹெட்டியராச்சி தெரிவித்தார்.

தேசிய மக்கள் சக்தியில் அருண் ஹேமச்சந்திரா மற்றும் ரோசான் அக்மீமன ஆகிய இரு உறுப்பினர்க-ளும், ஐக்கிய மக்கள் சக்தியில் இம்ரான் ம்.ஃரூபும், இலங்கை தமிழரசுக் கட்சியில் கே.எஸ். குகதாசனும் தெரிவு செய்யப் பட்டுள்ளனர்.

அருண் ஹேமச்சந்திரா 38368 வாக்குகளையும்,ரோசான் அக்மீமன 25814 வாக்குகளை யும், இம்ரான் ம்.ஃரூப் 22779 வாக்குகளையும், கே.எஸ்.குகதாசன் 18470 வாக்குகளை யும் பெற்று திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.



பாராளுமன்ற தேர்தலில் போட்டியிட்டவர்களின் விருப்பு வாக்குகள்

தேசிய மக்கள் கட்சி யில் போட்டியிட்ட வேட்பாளர்களில் அருண் ஹேமச்சந்திரா 38,368, ரோசான் அக்மீமன 25,814, இந்திக பிரியதர்சன 23,587, எம்.ஈ.எம்.ராபீக் 18,127, எம்.கே.எம்.சப்ரான் 17,247, கே.ஷீலா 9729, சௌகன் ராஜேந்திரன் 4921 ஆகியோர் வாக்குகளைப் பெற்றனர்.

ஐக்கிய மக்கள் சக்தியில் போட்டியிட்ட இம்ரான் ம்.ஃரூப் 22,779, ஹில்மி ம்.ஃரூப் 19,528, எம்.எஸ்.தௌபீக் 17958, ஜே.எம்.லாஹிர் 10,380, ஏ.கே.ரணசிங்க பண்டா 4370, கே.எப்.பியந்த பிரமகுமார 3268, ஏ.பிரான்சிஸ் சேகர் 1344 ஆகியோர் வாக்குகளைப் பெற்றனர்.

இலங்கை தமிழரசுக் கட்சியில் கே.எஸ்.குகதாசன் 18,470,ரீ.துஷ்யந்தன் 9473, கே.ஜீவரூபன் 8352, கே.சுந்தர லிங்கம் 5774, கே.கோகுல்ராஜ் 3073, ஏ.யதீந்திரா 2935, கே.தேவகடாட்சம் 1574 ஆகியோர் வாக்குகளைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

## அட்டாளைச்சேனையில் சின்னமுத்து தடுப்பூசி



(நூருல் ஹுதா உமர்)

சின்னமுத்து நோயிலிருந்து மக்களை பாதுகாக்கும் பொருட்டு சுகாதார அமைச்சு நாடளாவிய ரீதியில் விசேட தடுப்பூசி வழங்கும் வேலைத்-திட்டமொன்றினை முன்னெடுத்-துள்ளது. அந்த வகையில் கல்முனை பிராந்தியத்தில் உள்ள 13 சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளிலும் 31 தடுப்பூசி வழங்கும் மையங்க-ளில் சின்னமுத்து தடுப்பூசி வழங்கப்பட்டு வருகிறது.

குறித்த தடுப்பூசியை வழங்கும் பிரதான நிகழ்வு சனிக்கிழமை (9) அட்டாளைச்-சேனை தேசிய கல்வியற் கல்லூரியில் இடம்பெற்றது. கல்விக் கல்லூரின் உப பீடாதிபதி எம்.சீ.ஜுனைடீன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி சகீலா இஸ்ஸதீன் பிரதம அதிதியாக கலந்து கொண்டு நிகழ்வை ஆரம்பித்து வைத்தார்.

அட்டாளைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தின் ஒருங்கிணைப்பில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிராந்திய தொற்று நோய் தடுப்பு பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.ஏ.சீ. எம்.பஸால், அட்டாளைச்-சேனை சுகாதார வைத்திய அதிகாரி ஏ.எம்.இஸ்ஸதீன், மேலதிக சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எம்.ஜே.நௌபல் உள்ளிட்ட சுகாதார திணைக்கள உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

# நுவரெலியாவில் 8 பாராளுமன்ற உறுப்பினர்கள்

(பி.கேதீஸ்)

நுவரெலியா மாவட்ட பாராளுமன்றத் தேர்தல் முடிவுகளின் படி தேசிய மக்கள் சக்தி 161167 வாக்குகளை பெற்று 5 ஆசனங்களையும், ஐக்கிய மக்கள் சக்தி 101589 வாக்குகளைப் பெற்று 2 ஆசனங்களையும் ஐக்கிய தேசியக் கட்சி 64672 வாக்குகளைப் பெற்று ஒரு ஆசனத்தையும் பெற்றுள்ளதாக நுவரெலியா மாவட்ட செயலாளர் நந்தன கலபொட ஊடகங்களுக்கு தெரிவித்தார்.

இதன்படி தேசிய மக்கள் சக்தி சார்பாக போட்டியிட்ட தினேஸ் மஞ்சுள சுரவீர ஆராய்ச்சி - 78832, எஸ்.எஸ்.எச்.எம்.மதுர தெகாம் பண்டார செனவிரட்ண - 52546, ராஜவர்தன கெதர விஜயவரட்ண - 39006, பி.பி. அனுஷ்கா தர்ஷினி திலகரட்ண - 34035, கிருஸ்ணன் கலைச்செல்வி -33346 என விருப்பு வாக்குகளைப் பெற்று பாராளுமன்றத்திற்கு தெரிவாகியுள்ளனர்.

ஐக்கிய மக்கள் சக்தி சார்பாக போட்டியிட்ட பழனி திகாம்பரம்-48018, வேலுசாமி இராதாகிருஸ்ணன் -42273 என விருப்பு வாக்குகளை பெற்று பாராளுமன்றத்திற்கு தெரிவாகியுள்ளனர். அதேவேளை ஐக்கிய தேசிய கட்சியில் போட்டியிட்ட ஜீவன் குமாரவேல் தொண்டமான் -46438 விருப்பு வாக்குகளைப் பெற்று பாராளுமன்றத்திற்கு தெரிவாகியுள்ளார்.



கற்பிட்டியில் அடை மழை தாழ் நிலப் பகுதிகள் நீரில் மூழ்கும் நிலை ஏற்பட்டுள்ளது. கற்பிட்டியில் கடந்த ஓர் இரு நாட்களாக பிற்பகல் வேலையில் மழையுடன் கூடிய காலநிலை நிலவி வருகின்றது.

எனினும் இன்று (17) பிற்பகல் இரண்டு மணி தொடக்கம் கடும் மழை பொழிவதை அவதானிக்க முடிந்தது. இதன் காரணமாக தாழ் நிலப் பிரதேசங்கள் நீரில் மூழ்கும் நிலை ஏற்படலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(படம்: எம்.எச்.எம்.சியாஜ்)

# தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு ஒலுவில் அல்-ஹம்றா மஹா வித்யாலயத்தில் விசேட நிகழ்வு





(எஸ்.அஷ்ரப்கான்)

2024 ஒக்டோபர் தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு ஒலுவில் அல்-ஹம்றா மஹா வித்யாலயத்தின் நூலக கற்றல் வள நிலையத்தினால் பல செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

இதன் அடிப்படையில் இறுதி நாள் நிகழ்வு (11) பாடசாலையில் நடைபெற்றது.

அதிபர் அ்'-ெய்க் யு.கே.அப்துர் ரஹீம், தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பாடசாலை நூலக பொறுப்பாசிரியர் ரி.எல்.ஏ.கபீர் வழிநடாத்தலில், இணைப்பாட விதானத்திற்கு பொறுப்பான பிரதி அதிபர் ஜே.வஹாப்தீனின் வழிகாட்டல் ஆலோசனையுடன் இந்நிகழ்வுகள் நடந்தேறியது.

இங்கு, துறை சார்ந்தவர்களினால் கருத்துரை வழங்குதல், ஆசிரியர் மாணவர்கள் மற்றும் நலன் விரும்பிகளினால் நூல்கள் அன்பளிப்பு செய்தல், கட்டுரைப் போட்டி நடாத்தி சான்றிதழ்களும் பரிசில்களும் வழங்குதல் போன்ற நிகழ்வுகள் மிகச் சிறப்பாக நடாத்தி முடிவுற்றமை குறிப்பிடத்தக்கது

# புத்தளம் மாவட்டத்தில் 8 பாராளுமன்ற உறுப்பினர்கள்

(எம்.எச்.எம்.சியாஜ்)

புத்தளம் மாவட்டத்தில் தேசிய மக்கள் சக்தி சார்பாக ஆறு உறுப்பினர்களும் ஐக்கிய மக்கள் சக்தி சார்பாக இரண்டு உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்

இவர்கள் பெற்றுக் கொண்ட விருப்பு வாக்குகள் விபரம்.

தேசிய மக்கள் சக்தி சார்பாக போட்டியிட்ட அபயரத்ன ஹேரத் முதியன்சலாகே ஹரிஸ்சந்ர அபயரத்ன - 113334, அஜித் கிஹான் - 58183, ஹேரத் முதியன்சலாகே கயான் ஜானக குமார - 51233, விஜேசிங்க முதியன்சலாகே ஹிருனி மதுஷா விஜேசிங்க - 44057, என்டன் சரத் ஜயக்கொடி - 43907, மொஹமட் ஜலீல் மொஹமட் பைசல்-42939, ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் போட்டியிட்ட அப்புஹாமி மாகவிட ஆரன் ஹெக்டர் ஹைஜினஸ் - 25755, மிஹிந்து குலசூரிய வீபெத்துகே ஜனத் சித்ரலால் பெர்னான்டோ - 18916 விருப்பு வாக்குகளைப் பெற்று பாராளுமன்ற உறுப்பினர்களக தெரிவு செய்யப்பட்டுள்ளனர்

# பாடசாலை சிறுவனை துஸ்பிரயோகம் செய்த சந்தேக நபரான ஆசிரியருக்கு விளக்கமறியல்

(பாறுக் ஷிஹான்)

பாடசாலை சிறுவனை பல முறை பாலியல் துஸ்பிரயோகம் செய்த சந்தேக நபரான 38 வயது ஆசிரியரை 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு சம்மாந்துறை நீதிவான் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

குறித்த சம்பவத்தில் பாதிக்கப்பட்ட தரம் 4 இல் கல்வி பயிலும் பாடசாலை சிறுவனின் பெற்றோரினால் 13.11.2024 அன்று மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டிற்கமைய சந்தேக நபரான 38 வயது ஆரம்ப கல்வி கற்பிக்கின்ற ஆசிரியர் கைது செய்யப்பட்டார்.

இச் சம்பவம் சம்மாந்துறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட புற நகர் பகுதி ஒன்றில் உள்ள பாடசாலையில் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

மேலும் குறித்த பாடசாலை மாணவனை அப்பாடசாலையின் மலசல கூடத்திற்கு அழைத்து சென்று பலமுறை பாலியல் துஸ்பிரயோகம் செய்துள்ளதாக 38 வயது மதிக்கத்தக்க சந்தேக நபரான ஆசிரியர் மீது முறைப்பாடு தெரிவிக்கப்பட்டிருந்தது.

குறித்த சம்பவம் தொடர்பில் சம்மாந்துறை பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டிற்கமைய சம்மாந்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கே.டி.எஸ் ஜெயலத் வழிகாட்டுதலில் பொலிஸ் குழுவினர் விசாரணை நடவடிக்கைகளை மேற்கொண்டு சந்தேக நபரான ஆசிரியரை சம்மாந்துறை நீதிவான் நீதிமன்றில் கடந்த புதன்கிழமை(13) முன்னிலைப்படுத்திய வேளை எதிர்வரும் நவம்பர் மாதம் 27 ஆந் திகதி வரை 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு சம்மாந்தறை நீதிவான் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

மேலும் குறித்த சம்பவத்தில் பாதிக்கப்பட்ட 9 வயது பாடசாலை சிறுவன் தற்போது சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகளை சம்மாந்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.